ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்
கொழும்பு
ஊடக அறிக்கை
பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே.: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: MannDT@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20210706

இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகங்களை வலுவூட்டுவதற்காக 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் ஐக்கிய அமெரிக்கா

கொழும்பு, ஜூலை 6 – உலகளாவிய தொற்றுநோயின் தாக்கத்துடன் போராடும் இலங்கையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு அமெரிக்கா வரவேற்பு ஊக்கமளிப்பொன்றை வழங்குகிறது. சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையினை விரிவுப்படுத்துவதில் மற்றும் வலுவூட்டுவதில், குறிப்பாக பெண் வர்த்தக உரிமையாளர்கள் மத்தியில், NDB வங்கியின் பணிக்கு உதவுவதற்காக ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது (U.S. International Development Finance Corporation - DFC) 75 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியளிப்பினை அந்த வங்கிக்கு வழங்குகிறது. இந்த நிதியளிப்பு ஒப்பந்தத்தின்படி, கடன்தொகையின் ஒரு பகுதியானது பெண்களுக்குச் சொந்தமான, பெண்கள் தலைமைதாங்கும் அல்லது பெண்களை வலுவூட்டும் உற்பத்தியொன்றையோ அல்லது சேவையையோ வழங்கும் வர்த்தகங்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

"நிதிகளுக்கான அணுகலை மேம்படுத்துவது இலங்கையில் உள்ள பெண் வர்த்தக உரிமையாளர்கள் தங்களது முழுமையான பொருளாதாரத் திறனை உணரவும், இலங்கையின் பொருளாதாரம் வளரவும் உதவும்," என இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் கூறினார். "பெண்கள் தங்கள் சொந்த நிறுவனங்களால் அவற்றின் உயர் முகாமைத்துவ பதவிகளில் பணிக்கமர்த்தப்படுவதை உறுதி செய்வதற்கு ஐக்கிய அமெரிக்கா உறுதிப்பூண்டுள்ளது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

DFC என்பது, குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளில் தனியார் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு நிதியளிப்பை வழங்குதல் மற்றும் அதற்கு வசதியளித்தலுக்கு முதன்மை பொறுப்பாக இருக்கும் ஐக்கிய அமெரிக்க சமஷ்டி அரசின் அபிவிருத்தி நிதி நிறுவனமாகும். இந்த உதவியானது, நிதி

ரீதியில் உள்வாங்கப்படுவதை மேம்படுத்தல், பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் தலைமைதாங்கும் நிறுவனங்களுக்கு உதவுதல் ஆகியவற்றை நோக்காகக் கொண்ட NDB இன் பெண்கள் முன்முயற்சிகள் தொடர்பான வங்கி நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைந்து செயற்படும் DFC இன் 2X மகளிர் முன்முயற்சியின் (DFC's 2X Women's Initiative) அங்கமொன்றாகும்.